கவனிக்க .- 2026.01.23 ஆந் திகதிய 2473 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2474- 2026 ජනවාරි මස 30 වැනි සිකුරාදා - 2026.01.30

2474ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | 2 |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 3 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026,பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82759 - 403 (2026/01)

# முன்னறிவித்தல்கள்

## காணி உரித்து நிர்ணய அறிவித்தல்கள்

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம்

நிர்ணய அறிவித்தல் இல. 5624 ( அம்பாறை)

இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் ஏதாவது ஒரு பகுதிக்கு ஏதேனும் உரிமைகோரல் அல்லது ஏதேனும் பங்கு அல்லது நலவுரித்து எவருக்காவது உண்டெனில் அதனை 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் கீழே ஒப்பமிட்டுள்ள எனக்கு அனுப்பாவிடின் மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் அவ்வாறான காணிகள் அரசுக்குரிய காணிகளாக பிரகடனப்படுத்தப்படும் எனவும் அரசுக்குரிய காணிகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டு அவை பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி பத்தரமுல்லை காணி நிர்ணயத் திணைக்களத்தில் கொடுக்கப்பட்டது.

பீ. சீ.டீ. சிகேரா,
நிர்ணய உத்தியோகத்தர்.

மேற்கூறிய அறிவித்தலின் பிரகாரம் உரிமைகோரும் பத்திரங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் - நிர்ணய அறிவித்தலின் கீழ் உரிமைகோரல்- என்னும் சொற்களைத் தெளிவாக விளங்கக்கூடியதாகக் குறிப்பிடல் வேண்டும்.

குறிப்பு:

(அ) அக்காணிகள் பற்றிய ஏனைய மேலதிக தகவல்களைக் காணி நிர்ணய உத்தியோகத்தரிடமிரிந்து அவற்றின் படங்களை நில அளவையாளர் நாயகத்திடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) இக்காணிகள் எவற்றிலேனும் உள்ள வழியுரித்து அல்லது அது போன்ற எந்த உரித்தும் அக்காணிக்குள்ள உரித்தாகும்.

(இ) இந்த அட்டவணையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத காணித் துண்டுகள் பற்றி இவ்வறிவித்தலின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது அக்காணிகள் விவரிக்கப்பட்ட எல்லைக்குள் அமைந்திருந்தாலும் சரியே. ஆகவே , அவ்வித காணித் துண்டுகள் பற்றி உரிமை கோரத் தேவையில்லை.

### அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், தமண பிரதேச செயலாளர் பிரிவில் ( அப்போது வெவ்கம்பற்று (தெற்கு) பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் ஒரு பகுதி) தமண கிராம அலுவலர் பிரிவில் தமண பிரதேசம் என்னும் நெல்லிக்கலே (அப்போது அரளு புளு நெல்லி ஒதுக்கிய காடு ) எனும் கிராமத்தில் அமைந்துள்ள கீழ் குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்ட கீழ்க்காணும் சகல காணித்துண்டுகளின் எல்லைகள் :

வடக்கு: நெல்லி காடு;
கிழக்கு: நெல்லி காடு;
தெற்கு: நெல்லி காடு;
மேற்கு: நெல்லி காடு.

பிரதேசவியற் பூர்வாங்க வரைபட (TOPO) இலக்கம் 53 (கிழக்கு)

| காணித் துண்டு இல. | காணியின் பெயர் | விசாலம் ஏ. | றூ. | பே. |
|---|---|---|---|---|
| 1. | நெல்லிகாடு (காடு) | 2683 | 2 | 12 |
| 2. | நெல்லிகாடு (கல்) | 0 | 0 | 16 |
| 3. | நெல்லிகாடு (காடு) | 4 | 2 | 21 |
| 4. | பாதை | 3 | 3 | 05 |
| 5. | நெல்லிகாடு (காடு) | 5 | 1 | 26 |
| | மொத்தம் | 2697 | 2 | 00 |

01- 336/1

---

## காணி உரித்து நிர்ணய அறிவித்தல்கள்

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம்

நிர்ணய அறிவித்தல் இல. 5625 ( அம்பாறை)

இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் ஏதாவது ஒரு பகுதிக்கு ஏதேனும் உரிமைகோரல் அல்லது ஏதேனும் பங்கு அல்லது நலவுரித்து எவருக்காவது உண்டெனில் அதனை 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் கீழே ஒப்பமிட்டுள்ள எனக்கு அனுப்பாவிடின் மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் அவ்வாறான காணிகள் அரசுக்குரிய காணிகளாக பிரகடனப்படுத்தப்படும் எனவும் அரசுக்குரிய காணிகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டு அவை பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி பத்தரமுல்லை காணி நிர்ணயத் திணைக்களத்தில் கொடுக்கப்பட்டது.

பீ. சீ.டீ. சிகேரா,
நிர்ணய உத்தியோகத்தர்.

மேற்கூறிய அறிவித்தலின் பிரகாரம் உரிமைகோரும் பத்திரங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் - நிர்ணய அறிவித்தலின் கீழ் "உரிமைகோரல்" என்னும் சொற்களைத் தெளிவாக விளங்கக்கூடியதாகக் குறிப்பிடல் வேண்டும்.

குறிப்பு:

(அ) இக்காணிகள் பற்றிய ஏனைய மேலதிக தகவல்களைக் காணி நிர்ணய உத்தியோகத்தரிடமிருந்து அவற்றின் படங்களை நில அளவையாளர் நாயகத்திடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) இக்காணிகள் எவற்றிலேனும் உள்ள வழியுரித்து அல்லது அது போன்ற எந்த உரித்தும் அக்காணிக்குள்ள உரித்தாகும்.

(இ) இந்த அட்டவணையில் வெளிப்படையாகக் குறிப்பி டப்படாத காணித் துண்டுகள் பற்றி இவ்வறிவித்தலின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது அக்காணிகள் விவரிக்கப்பட்ட எல்லைக்குள் அமைந்திருந்தாலும் சரியே. ஆகவே , அவ்வித காணித் துண்டுகள் பற்றி உரிமை கோரத் தேவையில்லை.

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அம்பாறை மற்றும் உஹண பிரதேச செயலாளர் பிரிவுகளில் ( அப்போது வெவ்கம்பற்று (வடக்கு) பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் புத்தன்கல, உஹண மற்றும் 26 ஆம் கொலனி (பகுதி) எனும் புத்தன்கல ஒதுக்கப்பட்ட காடு) எனும் கிராமத்தில் அமைந்துள்ள கீழ் குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்ட கீழ்க்காணும் சகல காணித்துண்டுகளின் எல்லைகள் :

வடக்கு: வடயன்தலாவ கிராம எல்லை;
கிழக்கு: மல்வத்து கிராம எல்லை மற்றும் அ.வ.அம்பாறை 125;
தெற்கு: அம்பாறை 01 கிராம எல்லை;
மேற்கு: உஹண கிராம எல்லை.

பிரதேசவியற் பூர்வாங்க வரைபட (TOPO) இலக்கம் 55 (கிழக்கு)

| காணித் துண்டு இல. | காணியின் பெயர் | விசாலம் ஏ. | றூ. | பே. |
|---|---|---|---|---|
| 1. | புத்தன்கல காடு (கல் மற்றும் காடு) | 818 | 3 | 00 |
| 2. | புத்தன்கல காடு (கல் மற்றும் காடு) | 3303 | 0 | 20 |
| 3. | புத்தன்கல காடு (கல் மற்றும் காடு) | 43 | 3 | 00 |
| | மொத்தம் | 4165 | 2 | 20 |

01- 336/2

---

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையில்,காலி மாவட்டத்தில், கரந்தெனிய பிராந்திய வருமான உத்தியோகத்தர் பிரிவின் பிரதேச செயலாளர் சுதசிங் அச்சிகே பிரசந்தி மதுரங்கனி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் 1984.06.18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள கா/ அ 3096 எல் எல் 4087 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான யட்டகல வசிக்கும் ஹேவா ஹக்குரு பேபியிடம் கையளித்து பலபிட்டி காணி பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல்.டீ.ஒ 556 இன் கீழ் 1986.07.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரித்தாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாதைமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகின்றேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2026.02.20 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாண சபையில் காலி மாவட்டத்தில் , பெந்தொட்ட வலல்லாவிட்டி கோரளையில், பிராந்திய வருமான அலுவலர் பிரிவின் யட்டகல ( தற்போது மாபிங்கொட 39 ஜீ) கிராம அலுவலர் பிரிவின் யட்டகல எனும் ஊரில் அமைந்துள்ள , நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள இலக்கம் பீ.பீ. ஏ.699 கொண்ட வரைபடத்தில் இலக்கம் 16 மற்றும் 19 கொண்ட காணித்துண்டாக பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள அளவில் ஹெக்டயார் ஒன்று(1) இரண்டு றூட்(2) முப்பது (30) பேர்ச். உள்ளதென கணக்கிடப்பட்டுள்ள யட்டகலகந்த என்று அழைக்கப்படும் பின்வருமாறு எல்லை கொண்ட அரசாங்க காணித்துண்டு.

துண்டிலக்கம் 16
வடக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 14 மற்றும் உ.வ. 352639;
கிழக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 15 மற்றும் கா.அ.அ.வ.36 இல் துண்டிலக்கம் 44;
தெற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 21 மற்றும் 22;
மேற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 14 மற்றும் 21.

துண்டிலக்கம் 19
வடக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 18 மற்றும் 21;
கிழக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 21;
தெற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 20;
மேற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 68.

எஸ்.ஏ. பிரசந்தி மதுரங்கனி,
பிரதேச செயலாளர்.

கரந்தெனிய,
2025.12.08.

01-323/1

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபை யில்,காலி மாவட்டத்தில், நெலுவ பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேசசெயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையில்) ரணேபுர ஹேவகே சாந்த பிரியதர்சன எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் 1995.12.18 ஆந் திகதி வழங்கியுள்ள இலக்கம் 2/கா/15/அ 30551- எல்.எல்.00410 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தனவலகம வசிக்கும் கால்லே கும்புரே கெதர செனவிரத்ன விடம் கையளித்து காலி காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் L.D.O. 2912 இன் கீழ் 1996.05.21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரித்தாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகின்றேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2026.02.20 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் நெலுவ பிரதேச செயலாளர் பிரிவில் வடக்கு ஹினிதும் பற்றில், தனவல கிராம அலுவலர் பிரிவில் தனவல (அ.வ.கா.471 ) எனும் ஊரில் அமைந்துள்ளதுமான அளவில் 0.579 ஹெக்டயார் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லை கொண்டதுமான அரசாங்க காணி- ஹீன்கந்தஹேனவத்த எனும்)

வடக்கு : அரசாங்க காணி;
கிழக்கு : பீ.கே. சந்திராவதீயின் காணி;
தெற்கு : பனங்கல வித்தானகே குணசேனவின் காணி;
மேற்கு : பமுணுசிங்ஹ லியனகே நெல்சனின் காணி.

R.H.S. பிரியதர்சன,
பிரதேசசெயலாளர்/ பிரதிக் காணி
ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையில்).

நெலுவ,
2025.12.01.

01-323/2

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையில், மாத்தறை மாவட்டத்தில், முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேசசெயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடையிலான) விந்தியா டீ. சமரக்கொடி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1986.02.12 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/ பிர/10294 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான ரங்சாகொட வடக்கு எனும் இடத்தில் வசிக்கும் ஜாதுங்க தஹநாயக்க மாடின் அவர்களுக்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் L.D.O. 1421 ஆம் இலக்கம் மற்றும் 1986.08.28 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவர் தொடரும் ஒருவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2026.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்..

**அட்டவணை**

தென் மாகாணத்தின், மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் கந்தபட பத்துவ மேற்கு பிரதேச வருமான அலுவலர் பிரிவின், கந்தபட தொகுதியின் மாகத்துரை கிராம அலுவலர் பிரிவில் ரங்சாகொட வடக்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள நில அளவையாளர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட 28 ஆம் இலக்க களப்பத்திரத்தில் அ.க.பி. 97 ஆம் இலக்க நில அளவை நில அளவைப் படத்தில் 556 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான 00ஏ.0.242 றூ. 30பே. அளவு பிரமாண்டமுடையது என கணக்கிடப்பட்டுள்ளதுமான பெடிவிலஹேன எனக் கூறப்படும் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க காணித் துண்டு.

வடக்கு : அ.க.பி. 97 இல் 553, 555ஆம் இலக்க துண்டுகள்;
கிழக்கு : அ.க.பி. 97 இல் 555ஆம் இலக்க துண்டு;
தெற்கு : பிரவேசப் பாதை;
மேற்கு : அ.க.பி. 97 இல் 557ஆம் இலக்க துண்டு மற்றும் பிரவேசப் பாதை.

விந்தியா டீ. சமரக்கொடி,
பிரதேசசெயலாளர்/ பிரதிக் காணி
ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையில்).

முலட்டியன,
2025.03.11.

01-371/1

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது துணை பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகா ணத்தின், முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) விந்தியா டீ. சமரக்கொடி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4ஆம் துணை உறுப்புரையின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1996.02.29 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாறை/ 8/பிர/31696 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான சீனிபெல்ல எனும் இடத்தில் வசிக்கும் லொக்கு கமகே தொன் தியஸ்

அவர்களுக்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் L.D.O. 1990 ஆம் இலக்கம் மற்றும் 1996.05.20 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவர் பின் தொடரும் ஒருவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன் . இது தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2026.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்..

**அட்டவணை**

தென் மாகாணத்தின், மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின், கந்தபட மேற்கு தொகுதியின் சீனிபெல்ல கிராம அலுவலர் பிரிவில் சீனிபெல்ல என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள நில அளவையாளர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட அ.க.பி. 80 ஆம் இலக்க துண்டு உடைக்கும் நில அளவைப்படத்தின் 307 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான 00ஏ.00 றூ, 30பே. அளவு பிரமாண்டமுடையதுமான 80 ஏக்கர் காணி என காட்டப்படும் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க காணித் துண்டு- மெதகுட்டிய.

வடக்கு : 306,308 ஆம் இலக்க துண்டுகள் மற்றும் பாதை;
கிழக்கு : 306ஆம் இலக்க துண்டு;
தெற்கு : 303ஆம் இலக்க துண்டு;
மேற்கு : பாதை.

விந்தியா டீ. சமரக்கொடி,
பிரதேசசெயலாளர்/ பிரதிக் காணி
ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையில்).

முலட்டியன,
2025.09.29.

01-371/2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கன பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் எலபொடகெதர உபாலி ராஜபக்ஷ ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1983.09.06 ஆந் திகதி வழங்கப்பட்ட அநு/ ராஜாங்கன/ பிர/ 7219ஆம் இலக்க நன்கொடைப்பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கன, தென்கரை, கால்வாய் இல.5 இன் கீழ் பதிவாகியுள்ள சுததகல தேவகே வயலட் அவர்களுக்கு கையளித்ததுடன் அநுராதபுர மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 394 எனும் இலக்கத்தின் கீழ் 1987.06.12 ஆந் திகதிய இலக்கம் 14/4759 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் துணைப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு வாரிசாக சட்டபூர்வமாக உரிமையுள்ள நபர் இல்லாத பட்சத்தில் அல்லது ஒருவர் இருந்தாலும் கூட அவர் உரிமையுள்ள வாரிசாக விரும்பவில்லை என்பதால் குறித்த காணிக்கு சட்டபூர்வமாக தகுதியுடைய வாரிசாக யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, மேற்படி சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ், மேற்படி கொடுப்பனவுப் பத்திரத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அதனை 2026.02.20 ஆந் திகதிக்கு முன் நீங்கள் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

வடமத்திய மாகாணத்தின் அநுராதபும் நிருவாக மாவட்டத்தின் தென் நுவரகம் பிரதேச வருமான அதிகாரி பிரிவின் எப்பாவளை கோறளை 7 ஏ கிராம அலுவலர் பிரிவின் ரொட்டவெவ ( ராஜாங்கன தென்கரைக் கால்வாய், இல. 05 ) என்ற கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 02 என்ற எல்லை வரைபடத்திலுள்ள 434 ஆம் இலக்க நிலத் துண்டாகக் மதிப்பிடப்பட்டுள்ள 01 றூட் 35பேர்ச் அளவுள்ள

அரசாங்கத்தின் ரொட்டவெவ முக்கலான காணி பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு : 122 ஆம் இலக்க வீதி;
கிழக்கு : 108 ஆம் இலக்க நிலப்பகுதி;
தெற்கு : 110 ஆம் இலக்க நிலப்பகுதி;
மேற்கு : 112 ஆம் இலக்க நிலப்பகுதி.

ஈ.பீ.யூ.ராஜபக்ஷ ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2025.06.25.

01-370

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவிற்கான ) அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தின், பல்லேபொல பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடையில் ) ஹுணுகெட்ட எல முதியன்சேலாகே சாந்தனீ ஏக்கநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் மேன்மைதகு சனாதிபதி அவர்களினால் 1996.01.12 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட இலக்கம் மத்திய / ப/ பொ/ 652 இனை வகிக்கும் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய கொப்பேவெஹெர என்னும் வதிவிடத்தைக் கொண்ட விஜேகோன் கெதர டிங்கிரி அம்மா எனும் நபருக்கு அளிக்கப்பட்டு மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் மத்திய/ ப/ பொ/652/8165/ 97 இன் கீழ் 1997.08.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு சட்டபூர்வமான மரணசாசன வழி உரிமையாளர் இல்லாமை அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் மரணசாசன வழி உரிமையாளர் ஆவதற்கு விருப்பமின்மை காரணமாக மரணசாசன வழி உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என பதிவாகி இருப்பதால் குறிப்பிடப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவிக்கின்றேன் . இது தொடர்பாக யாதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை 2026.02. 26 ஆந் திகதிக்கு முன் எனக்கு அறியத்தர வேண்டும்.

**அட்டவணை**

மாத்தளை நிர்வாக மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலக பிரிவுன் உடுகொட பல்லேசிய பத்துவின் கொப்பேவெஹெர கிராம அலுவலர் பிரிவின் கொப்பேவெஹெர எனும் கிராமத்தில் அமைந்துள்ள மற்றும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட இலக்கம் 02 இனை வகிக்கும் களப் பத்திரத்தில் இ.கி.வ. 76 இனை வகிக்கும் காணி வரைபடத்தின் இலக்கம் 342 1/3, வகிக்கும் காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுடன், அளவில் 01 ஏக்கர் விஸ்தீரணத்தினைக் கொண்டுள்ள கீழ் குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்ட அரசாங்க காணியான யக்கல்பொத்த.

வடக்கு : வீதி ஒதுக்கீடு;
கிழக்கு : துண்டிலக்கம் 343;
தெற்கு : துண்டிலக்கம் 342 2/3, 342 3/3;
மேற்கு : துண்டிலக்கம் 341.

எச்.எம்.சீ. ஏக்கநாயக்க ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பல்லேபொல,
2025.10.22.

01-446/1

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவிற்கான ) அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தின், பல்லேபொல பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடையில் ) ஹுனுகெட்ட எல முதியன்சேலாகே சாந்தனீ ஏக்கநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் மேன்மைதகு சனாதிபதி அவர்களினால் 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆந் திகதியன்று வழங்கப்பட்ட இலக்கம் மத்திய / ப/ பொ/ 1120 இனை வகிக்கும் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய எஸ்வெத்துமே கெதர யசோமெணிகே எனும் நபருக்கு அளிக்கப்பட்டு மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் மத்திய/ ப/ பொ/1120/3/86/97 இன் கீழ் 1997.05.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு சட்டபூர்வமான மரணசாசன வழி உரிமையாளர் இல்லமை அல்லது உரிமையாளர் இருந்தும் இவர் மரணசாசன வழி உரிமையாளர் ஆவதற்கு விருப்பமின்மை காரணமாக மரணசாசன வழி உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என பதிவாகி இருப்பதால் குறிப்பிடப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவிக்கின்றேன் . இது தொடர்பாக யாதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை 2026.02. 20 ஆந் திகதிக்கு முன் எனக்கு அறியத்தர வேண்டும்.

**அட்டவணை**

குறிப்பிட்ட நிர்வாக மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலக பிரிவின் உடுகொட பல்லேசிய பத்துவின் தெமதஓய கிராம அலுவலர் பிரிவின் தெமதஓய எனும் கிராமத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர் விஸ்தீரணத்தினைக் கொண்டுள்ள கீழ்க் குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்ட அரசாங்க காணியான எட்டம்பகஹலந்த ஹேன.

வடக்கு : அழுத்கம நாலந்த வீதி ஒதுக்கீடு;
கிழக்கு : மேல்பிடிய கிராமத்தின் எல்லை இ.கி.வ. 264;
தெற்கு : காணியின் மிகுதி பகுதி;
மேற்கு : ஐ.ரீ.சீலவதி உடைமையிலிருக்கும் எல்.எல்.காணி.

எச்.எம்.சீ. ஏக்கநாயக்க ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பல்லேபொல,
2025.11.14.

01-446/ 2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட ) டீ.ஏ.பி.தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986, செத்தெம்பர் 18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/ பிர/ 2624 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பிலெக்பூல் என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி சமரகோன் ஹேரத் முதியன்சேலாகே ரம்மெனிகா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நுவ/ 11/1549/ 86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.09.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்பு மதப்புலி ஆரச்சிகே துர்கா விஸ்வகலா என்பவருக்கு வாழ் கால விதிப்பு வழியில் உடமை பெறு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO A / 15/02 ஆம் இலக்கத்தின் கீழே 2017/04/11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து

நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் கடவத் சதர பற்றிலுள்ள / கோரளையிலுள்ள பிலெக்பூல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிலெக்பூல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ........ ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பி.பி.நு. 832 ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் 01 ஆம் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.107 றூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : மாகொட சட்டம்;
கிழக்கு : மாகொட சட்டம்;
தெற்கு : பி.பி.நு. 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 26;
மேற்கு : பி.பி.நு. 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 37.

டீ.ஏ.பீ. தனன்சூரிய ,
பிரதேச செயலாளர்,
பிரதிக் காணி ஆணையாளர்
( மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2024.08.16.

01-451/ 1

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ.ஏ.பி.தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1993, யூலை 29 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ நுவ/ 168ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான மிஹிந்துபுர மீபிளிமான என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி பீரிஸ் ஆரச்சிலாகே எலிஸ்னோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நுவ/ 28/594/93ஆம் இலக்கத்தின் கீழ் 1993, திசெம்பர் 15ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத பற்றிலுள்ள / கோரளையிலுள்ள மிஹிந்துபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சீதாஎளிய என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பீ.53 பீ/ அ.அ.3 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் கெ.மெ.மு.பீ. 53 பீ ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட........... இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் 113 ஆம் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.052 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் மாகொட சட்டம் என்று அழைக்கப்படும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:.

வடக்கு : துண்டு இலக்கம் 45;
கிழக்கு : துண்டு இலக்கம் 110;
தெற்கு : துண்டு இலக்கம் 112;
மேற்கு : துண்டு இலக்கம் 114.

டீ.ஏ.பீ. தனன்சூரிய ,
பிரதேச செயலாளர்,
பிரதிக் காணி ஆணையாளர்
( மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2024.03.25.

01-451/ 2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ.ஏ.பி.தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1987, ஓகத்து 28ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ நுவ/ 1585 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ஹக்கல என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி கோப்பிவத்தே கெதர சாந்தனி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நுவ/ 51/1952/ 97ஆம் இலக்கத்தின் கீழ் 1997.10.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்பு கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் கடவத் சதர பற்றிலுள்ள / கோரளையிலுள்ள கொண்டிஹெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹக்கல என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ............ ஆம் இலக்க வெளிக்களத் தாளில் ............ இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் ............ஆம் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 01 றூட் விஸ்தீரணமுள்ளதும் மாகொட சட்டம் என்று அழைக்கப்படும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.:

வடக்கு :சீதாஎலியா ஒதுக்கப்பட்ட காணி;
கிழக்கு : டீ.டப். சோமாவதி உடைய காணி;
தெற்கு : பொது பாதை ஒதுக்கீடு;
மேற்கு : ஆர்.எம். அப்புஹாமி உடைய காணி.

டீ.ஏ.பீ. தனன்சூரிய ,
பிரதேச செயலாளர்,
பிரதிக் காணி ஆணையாளர்
( மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2025.06.30.

01-451/ 3

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான (104 ஆம் பிரிவு) அறிவித்தல்**

தென் மாகாண சபையில், காலி மாவட்டத்தில், கோனாபீனுவல பிரதேச செயலாளர் பிரிவின் , பிரதேச செயலாளர் மொஹொமட் முக்தார் மொஹொமட் சர்பாஸ் எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1984.06.22 ஆந் திகதி வழங்கியுள்ள கா/அ 4431 எல் எல் 6728 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரானஅளுத்வல இல் வசிக்கும் ஜாலத்கே லீலசேனவிடம் கையளித்து காலி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல்.டீ.ஓ. 1567/ C4/ 34 இன் கீழ் 1986.09.08 ஆந் திகி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேற் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகின்றேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2026.02.20 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிருவாக மாவட்டத்தில் , அம்பலங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் ( தற்போது கோனாபீனுவல பிரதேச செயலகப் பிரிவில்) வெல்லபட பற்றில்/ கோரளையில், அளுத்வல கிராம அலுவலர் பிரிவில் ( தற்போது 66 சீ பான்வெல்கொடெல்ல கிராம அலுவலர் பிரிவில்) அளுத்வல எனும் ஊரில் அமைந்துள்ளதுமான ........... பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவை நாயகத்தால் தயாரித்த இலக்கம் ........ கொண்ட வெளிக்களத்தாளில் /.......... ஆல் தயாரித்த இலக்கம் அ.வ.ஏ.288 கொண்ட கண்டமிடும் வரைபடத்தில்/................ ஆல் தயாரித்த இலக்கம் ............ கொண்ட காணி உறுதிப்படத்தில் இலக்கம் 56 கொண்ட காணித்துண்டாக காட்டியுள்ளதுமான அளவில் 00ஏ. 03றூ.23பே. விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லை கொண்ட அரச காணி பான்வெல்கொடெல்ல.:

வடக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 49;
கிழக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 55;
தெற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 57;
மேற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 37.

மொஹொமட் முக்தார்
மொஹொமட் சர்பாஸ் ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கோனபீனுவல,
2025.11.17.

01-449